மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நெறியாளர், ஊராட்சி மன்றத்தின் தீர்மானத்தை மீறி செயல்பட்டதாகக் கருதமுடியாது.

Thiru K. VINAYAKAM : Sir, I rise on a point of order.

நான் கோடம்பாக்கத்தைச் சேர்ந்தவன், கோடம்பாக்கத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டாலும் நான் மாநிலம் முழுவதற்குமான நன்மையை உத்தேசித்து செயல்பட வேண்டிய பிரதிநிதி இல்லையா ? நான் சின்னாளப்பட்டியைப் பற்றி கேள்வி போடக்கூடாது என்கிற விதி இருக்கிறதா ?

Sir I want your ruling.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நானும் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேறு ஒரு பக்கத்தில் குடியிருந்து கொண்டு நான் கோடம்பாக்கத்துக்காரன், நான் கோடம்பாக்கத்துக்காரன் என்று சொல்லிக்கொள்வது முறைதானா ?

திரு. கே. விநாயகம் : நான் கோடம்பாக்கம் தொகுதியில் இருந்து வெற்றி பெற்று வந்த சமயம்தான் முதல் அமைச்சர் அவர்கள் காஞ்சீபுரம் தொகுதியில் இருந்து வெற்றிபெற்று வந்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அவருடைய திருவல்லிக்கேணி வீட்டில் நான் ஒரு நாள் விருந்தினராக இருந்தேன் என்பதை அவருக்கு நினைவுபடுத்துகிறேன். (சிரிப்பு).

பீர்க்கன்காரணைப் பஞ்சாயத்து

***368 வினா.—திரு. முனு ஆதி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தாம்பரத்தை அடுத்த பீர்க்கன்காரணைப் பஞ்சாயத்துக்கான உறுப்பினர்கள் தேர்தல் இது நாள் வரை நடைபெறாமல் இருப்பதன் காரணம் என்ன ?

(இ) இத்தேர்தலை விரைவில் நடத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) பீர்க்கன்காரணை பஞ்சாயத்து உறுப்பினர்கள் தேர்தல் 28–1–1965-ல் நடைபெற இருந்தது. ஆனால் உயர் நீதி மன்றம் விதித்த ஆணையின் காரணமாக தேர்தல் நடைபெறவில்லை. வழக்கில் உயர் நீதி மன்றம் முடிவான தீர்ப்பு வழங்கிய பின்பு நாட்டில் ஏற்பட்டிருந்த அவசர நெருக்கடி காரணமாக எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் அங்கத்தினர்களின் தேர்தல் நடத்துவது நிறுத்தப்பட்டிருந்தது. இந்த ஆணையை மாற்றி உடனடியாகத் தேர்தல்கள் நடத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

தாம்பரம் நகராட்சி மன்றம்

***369. வினா.—திரு. முனு ஆதி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) தாம்பரம் நகராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நடைபெறும் என்று அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) : இது அரசின் பரிசீலனையில் உள்ளது.